[2002 அக்டோபர் 29

62—

மாணவர் விடுதி

***23537—திரு. எஸ். மகாலிங்கம்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி தொகுதி, சேயூர் பகுதியில் ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி நடப்பு நிதியாண்டில் அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புதியதாக மாணவ, மாணவியர் விடுதிகள் திறக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. எஸ். மகாலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது பணிவான வணக்கம். காவிரி டெல்டா பகுதி விவசாயிகளுக்கு தீபாவளிப் பரிசாக வாரி வழங்கிய வள்ளல் பெருமான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தையும், நன்றியையும், அம்மா அவர்களின் பாத மலர்களில் சமர்ப்பிக்கிறேன்.

அரிசியின் மீதான வரியை அடியோடு ரத்து செய்து தமிழக மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிக்கொண்டு இருக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள், இன்னும் 10 ஆண்டுகளில் தமிழகத்தில் கல்லாதவர்கள் இல்லை என்ற நிலையை உருவாக்க, கல்வியின் நலனைப் பேணிப் பாதுகாப்பதற்கு, பல்வேறு கோணங்களில், பல்வேறு நலத் திட்டங்களை வாரி வழங்கி உள்ளார்கள். தமிழகம் முழுவதும் உள்ள தாழ்த்தப்பட்ட, ஆதிதிராவிட மாணவிகளுக்கு இலவச மிதிவண்டித் திட்டத்தை அமல்படுத்தி, பல்லாயிரக்கணக்கான மிதி வண்டிகளை வாரி வழங்கி உள்ளார்கள். அந்த மாணவிகள் இறுதி வரை இலவசமாகப் படிக்கும் திட்டத்தையும் அமல்படுத்தி உள்ளார்கள். எனவே, அதற்கு எனது நன்றியை, அம்மா அவர்களின் பாத மலர்களில் சமர்ப்பித்துக்கொள்கிறேன். கோவை மாவட்டத்திலேயே

2002 அக்டோபர் 29]

அதிகமாக ஆதிதிராவிட மக்கள் வசித்துக்கொண்டு இருக்கக்கூடிய அவினாசி தொகுதியில் 500-க்கும் மேற்பட்ட தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சீர்மரபினர் மாணவ, மாணவியர்கள் பயின்று வரும் சேயூர் பகுதியிலே அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர் ஆதிதிராவிடர் நல விடுதி நடப்பு நிதியாண்டில் அமைத்துத் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத் துறையின்கீழ் 1,076 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. இந்த விடுதிகளில் சுமார் 77,500 மாணவ, மாணவியர்கள் தங்கி உள்ளனர். முந்தைய தி.மு.க. ஆட்சியில் உணவுக் கட்டணமாக மாணவர் ஒருவருக்கு மாதம் ரூ. 225 வழங்கப்பட்டது. அதன் மொத்தச் செலவு ரூ. 17.43 கோடி ஆகும். ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக வந்ததற்குப் பின்பு மாணவ, மாணவியர்களுக்குத் தரமான உணவு வழங்க வேண்டும் என்று, உணவுக் கட்டணத்தை ஒருவருக்கு மாதம் ரூ.300 ஆக உயர்த்தி வழங்கியுள்ளார்கள். தற்போது உணவுக்காக மொத்தமாக ஆகும் செலவு ரூ.23.25 கோடியாகும்.

முற்பகல் 11-05

கடந்த தி.மு.க. ஆட்சியில் வழங்கியதைவிடக் கூடுதலாக, உணவுக் கட்டணமாக ரூ.5.82 கோடி செலவாகிறது. இதுமட்டுமின்றி, பழங்குடி மாணவ, மாணவியருக்கு 26 விடுதிகள்; மேலும் 247 உண்டு உறைவிடப் பள்ளிகள்; அதில் 17,300 மாணவ, மாணவியர்கள் தங்கியுள்ளனர். கடந்த தி.மு.க. ஆட்சியிலே அதற்கான செலவு ரூ.3.89 கோடி. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, உணவுக் கட்டணத்தைக் கூட்டியதால், உயர்த்தியதால், தற்போது ரூ.5.19 கோடியாகச் செலவு ஆகிறது. இதனால் கடந்த ஆட்சியைவிட, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் ரூ.1.30 கோடி கூடுதலாகச் செலவு செய்யப்படுகிறது. ஆனால், விடுதியில் தங்கிப் படிக்கின்ற மாணவ, மாணவியர்களுக்கு நல்ல தரமான உணவு வழங்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, நிதி நெருக்கடி இருக்கின்றபோதும், அம்மா அவர்கள் ரூ. 7.34 கோடி கூடுதலாக ஒதுக்கித் தந்திருக்கின்றார்கள். கோவை மாவட்டத்தில் 36 விடுதிகள் உள்ளன. அதில் 26 விடுதிகள் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. அவினாசி தொகுதியில் சொக்கம்பாளையத்தில் மாணவர்

விடுதி ஒன்றும், மாணவியர் விடுதி ஒன்றும், அவினாசியில் ஒரு மாணவர் விடுதியும், ஆக மொத்தம் 3 விடுதிகளும் தற்போது சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்ற விடுதிகளைச் சொந்தக் கட்டடங்களுக்கு மாற்ற வேண்டும். மேலும் விடுதிகளில் தங்கிப் படிக்கின்ற மாணவ, மாணவியர்களின் நலன்களைப் பாதுகாக்கின்ற அரசாக விளங்கி வருகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தை ஆய்வு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்.

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மாணவ, மாணவியருக்கு 1991-96-க்கு இடைப்பட்ட 5 ஆண்டு கால ஆட்சியில் மாணவர்களுக்கு உணவுக் கட்டணம் எவ்வளவு வழங்கப்பட்டது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: இதற்குத் தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 63, திரு. ஜே. ஹேமச்சந்திரன், மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

63—

கட்டடம்

***6966—திரு. ஜே. ஹேமச்சந்திரன்:**

மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் குலசேகரம் உதவி செயற் பொறியாளர் அலுவலக வளாகத்தில் உதவிப் பொறியாளர்கள் அலுவலகம் கட்டுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? சொந்தக் கட்டடம் அமைப்பதில் காலதாமதம் ஏற்படுவது ஏன்?

(ஆ) வாடகைக் கட்டடங்களுக்குத் தற்போது வழங்கி வரும் வாடகை எவ்வளவு?